*கவனிக்க.- 2007.02.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1486 - 2007 පෙබරවාරි 23 වැනි සිකුරාදා - 2007.02.23**

*1486 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 116 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 116 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மார்ச்சு 02 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, பெப்புருவரி 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அட்டோர்னி தத்துவதாரராக கொழும்பு 12, மெஸன்ஜர் வீதி, இல. 39 ஐச் சேர்ந்த மொஹமட் சிராஜ் காஸிம் என்பவரை நியமித்து திருமதி எஸ் கங்காதரன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2003.10.20 ஆந் திகதிய இல. 5629 எனும் அட்டோர்னி தத்துவத்தை கொழும்பு 12, மெஸன்ஜர் வீதி, இல. 39 இல் தற்போது வசிக்கும் திருமதி அமீனா காசிம் அல்லாரகா ஆகிய நான் இரத்துச்செய்கிறேன்.

அத்துடன் மேற்படி அட்டோர்னி தத்துவத்தின் கீழ் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தக் கைங்கரியங்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

ஏ. கியூ. அல்லாரகா.

2-618

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, தலாதுவ, இல. 159 இல் வசிக்கும் வர்ணகுலசூரிய சுனில் விக்டர் பெர்னாண்டோ ஆகிய (தே. ஆள். அட். இல. 591670166V) நான் கொச்சிக்கடை, பல்லன்சேனயில் வசிக்கும் டக்ளஸ் அமரசிங்க பிரசித்த நொத்தாரிசினால் 1997.07.26 ஆந் திகதி எழுதப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட இல. 1460 கொண்ட அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் மூலம் நீர்கொழும்பு, தலாதுவ, இல. 159 இல் வசிக்கும் மஹதெல்கே டியூடர் பெனடிக் பீரிஸ் என்பவர் எனது அட்டோர்ணித் தத்துவதாரராக நியமிக்கப்பட்டு அந்த நியமனத்தை நான் இத்தால் இரத்துச் செய்து செல்லுபடிற்றதாக்குகின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வர்ணகுலசூரிய சுனில், விக்டர் பெர்னாண்டோ.

2-631

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அமெரிக்கா, இல. 2339, பெட்வர்ட் சயர், சர்கல், டெஸ்டர்ன் வர்ஜியா, வில் வசிக்கும் சூலா நந்தனி ஸ்ரீயாணி குணசேக்கர மற்றும் ஜயசிங்ஹகே டொன் ஹேமச்சந்திர குணசேக்கர ஆகிய எம்மால் வழங்கப்பட்ட மைக்கல் ஹென்லே பகிரங்க நொத்தாரிசினால் 03.10.2006 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 78, 3வது லேன், அபய பிளேஸ், அனுராதபுரத்தில் வசிக்கும் கம்புறுகமுவ லொக்கு ஆசாரிகே மைத்திரிபால என்பவருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு அட்டோர்ணி பத்திரம் 31.01.2007 திகதி முதல் இரத்துச் செய்யப்படுகின்றது. இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்ற திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பின்னர் நாம் பொறுப்பாளிகள் அல்ல.

சூலா நந்தனி ஸ்ரீயாணி குணசேக்கர
மற்றும்
ஜயசிங்ஹகே டொன் ஹேமசந்திர குணசேக்கர.

2-633

## அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. C1/6, சேர் ஜேம்ஸ் பீரிஸ் வீடமைப்புத் திட்டம், சேர். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரியில் வசிக்கும் பன்வில மனன்னலாகே சோமாவதி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சகல பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பது மஞ்சுலா ஸ்ரீமதி கணேசன் பிரசித்த நொத்தாரிசுவினால் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 05 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4234 ஆம் இலக்கம் கொண்ட அற்றோனித் தத்துவப் பத்திரம் மூலம் C/G/4, சேர். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரியில் வசிக்கும் கஹவே பல்லியகுருகே மனோரி ஷியாமா விஜேவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோனித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்வதுடன் இது செல்லுபடியாகாது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

பன்வில மனன்னலாகே சோமாவதி.

2-654

# ஏல விற்பனைகள்

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி-பதுளை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை**

பதுளை பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். பி. ஆனந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 2003.01.22 ஆந் திகதிய இலக்கம் 9418 என்ற முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் தேவானத்ஹெலாகே சனத் தர்மஸேன கடனாளராக தவணை தவறியுள்ளாராதலாலும் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அது அமைந்துள்ள இடத்திலேயே 2007 மாச்சு மாதம் 12 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு என்னால் அது பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

**ஆதனத்தின் விஸ்தீரணம்.-** ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் உடுகிந்த பிரதேசத்தில் உடுபலாத்த கோரலே கோரந்தி எல்ல ஊரில் இருக்கும் என்னீஸ் லேண்ட் எனும் பெயரால் அறிமுகப்படுத்தப்பட்ட காணியில் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். பெரேரா என்பவரால் 1998.06.25 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 3787 என்ற வரைபடத்தில் வேறாக்கப்பட்ட லொட் 11 எனும் காணியாகும்.

விஸ்தீரணம்- பேர்ச்சஸ் 14.50

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2006.12.29 ஆந் திகதியஅரசாங்க வர்த்தமானியையும் 2007.01.17 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றியீட்டிய கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் 1% ;
(3) ஏலவிற்பனையாளரின் தரகுப் பணம் 2 1/2%
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500% ;
(5) வேறு செலவினங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்காக நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தப்பட்ட கட்டணம் 2000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்கு பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்தல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10%த்தை திருப்பி செலுத்தாமல் இருக்கவும் மீள சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப்பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் முகாமையாளர் ஹட்டன் நெஷனல் வங்கிக் கிளை (தொலைபேசி இலக்கம் 055- 4499701/ 055-2222991) அல்லது கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, பிரதான காரியாலயம் பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு) தொலைபேசி இலக்கம் 2661815/ 2661816 இல் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

என். எச். டி. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்,
அதிகாரம் பெற்ற ஏலதாரரும்.

இல. 34/31, அல்லது 32,
நீதி சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

2- 733

---

## செலான் வங்கி - எம்பிலிபிட்டிக் கிளை

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கொலொன்னவில் தியபொட்டகம பத்துவிலுள்ள எம்பிலிபிட்டிய பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள 10.11.1996 திகதியிடப்பட்ட காணி உறுதி இல. 7525 இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்துடன் 07.11.1996 திகதியிடப்பட்ட நில வரைபட இல. 1014 இலும் FVP 779 இன் காணித்துண்டு 227 இன் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருவயேகெதர - வத்த என்று அழைக்கப்படுகின்ற சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அத்துடன் அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடனும் இரண்டு தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.14) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் (இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 165/94 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது)

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கொலொன்ன கோரளையைச் சேர்ந்த தியபொட்டகம பத்துவிலுள்ள எம்பிலிபிட்டிய பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள 16.11.1996 திகதியிடப்பட்ட காணி உறுதி இல. 7536 இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்துடன் 07.11.1996 திகதியிடப்பட்ட நில வரைபட இல. 1015 இலும் FVP 779 இன் காணித்துண்டு 227 இன் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருவயேகெதர என்றழைக்கப்படுகின்ற சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அத்துடன் அங்கு காணப்படுகின்ற கட்டணங்கள் பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடனும் இரண்டு தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.14) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் (இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 145/6, G 145/202 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது)

*(கடன்பட்டார் என்ற வகையில் எம்பிலிபிட்டிய, நவநகர வீதி, மயுர டெக்ஸஸ்டைல் விதான ஆரச்சிகே சரத்குமார மற்றும் தேசா ரஞ்சனி தஹநாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

மேலே விபரிக்கப்பட்ட சொத்தை 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு நான் அதே இடத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2005.08.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2005.06.08 ஆந் திகதிய “டெயிலி நியுஸ்”, “தினமின” மற்றும் “தினகரன்” பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- குறிப்பிட்ட காணியை அடைவதற்கு எம்பிலிப்பிட்டிய கடிகார கோபுர சந்தியிலிருந்து புதிய நகரம் ஊடாக சுமார் 400 மீட்டர் தூரம் செல்லவும்

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின்பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு. கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் “கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலிங்கோ செலான்கோபுரம் செலான் வங்கி லிமிட்டெ, பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)” இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456258, 2456263, 2456284,

துசித கருணாரத்ன (ச. நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940

2-735

**டீ. எப். சீ. சீ. வங்கி**

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**கம்மதுவ பெருந்தோட்டம் (தனி) நிறுவனம் ஏலவிற்பனை**

***10563 இலக்கம் கொண்ட பிணை உறுதிகளின் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்தின் விபரம்***

*அடங்கும் குத்தகை உரிமை :*

*கம்மதுவ என்றழைக்கப்படும் பெருந்தோட்டங்களும் கட்டிடங்களும் அவற்றிலுள்ள தோட்ட பங்களாக்களும், லயங்களும் அலுவலங்கள் களவறைகளும், நறுக்கும் தளங்களும், ஏனைய கட்டிடங்களும், மரஞ்செடிகளும், கற்பாறைகளும் மற்றும் அவற்றில் இருப்பவையும் உள்ளடங்குபவையும்.*

*மத்திய மாகாணம், மாத்தளை பிரதேசத்தில் கிழக்கு மாத்தளை அம்பங்கங்க கோரளையில் உள்ள கம்மதுவ கிராமத்திற்கு அடங்கியதும் உரிமைபெற்ற நிலஅளவையாளர் P. S. M. M. பிதெனிய என்பவரால் 1997, திசெம்பர் 29 அன்று பகுதிகள் 1, 2, 3, 4 என பிரித்தெழுதப்பட்ட இலக்கம் 68/97 கொண்ட கம்மதுவ ஷேபெருந்தோட்டத்தின் கம்மதுவ டிவிஷன் என்ற முழுப்பகுதியும்*

***விஸ்தீரணம் : பகுதிகள் 1, 2, 3 - 205.3296 ஹெக்டயார்***
***பகுதி 4 - 45.4548 ஹெக்டயார்***

*2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**– சித்திகரமான கொள்வனவாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் அதிகார வரி 1% ;

(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை வீதம் மாத்திரம்) ;

(4) ரூ. 23,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவில் 50% ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு டீ. எப். சீ, சீ. வங்கியின் சட்டத் திணைக்களத்தை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011-2440366.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையின் கீர்த்திவாய்ந்த பட்டய
ஏலதாரர் மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி | கொழும்பு 05 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011- 2502680, 011- 2585408, |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011- 2588176 |
| | ஈ-மெயில் : sameera@sri.lanka.net |

2-738

---

**மக்கள் வங்கி - கல்நேவ கிளை**

**மகாவலி 'எச்' வலயத்திற்குரிய புல்நெவ நகரத்தில் கலாவெவ தம்புத்தேகம ஜயமாவத்த பிரதான பாதையின் முன் பக்கம் பாதையின் தெற்கு திசையில் அமைந்துள்ள 1ஏக்கர். 3றூ. 27பே. (ஹெக்டயர் 0.778) பேர்ச்சஸ் 14 (ஹெக்டயர் 0.036) விசாலமுள்ள காணிப்பகுதிகள் இரண்டிலும் குத்தகை உரிமையும் அதற்குள்ளே அமைந்துள்ள சகல வசதிகளும் உட்பட அரிசி ஆலைத் திட்டமும் அதன் இயந்திர உபகரணங்களும் ஏலவிற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 06.03.2007 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு.**– 1999.12.10 ஆந் திகதிய அரச வர்த்தமானியிலும் 1999.12.08 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", பத்திரிகையையும், 1999.12.06 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு நுழையும் வழி.**– கல்நெவ ஜயமாவத்தையில் 2.5 கி. மீ. அளவிலான தூரத்தில் புல்நெவ கிராமத்திற்கு அருகில் பிரதான பாதையில் தென் திசையில் பிரதான பாதைக்கு அடுத்து ஆனத்திற்கு ஒரு தடையும் இல்லாமல் பிரவேசிக்க முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**– ஏலவிற்பனை நடைபெற்ற உடன் கொள்வனவாளர் மூலம் கொள்வனவு விலையில் 25% ; பிரதேச சபை குத்தகைப் பணமாக 1% உம் ஏலதாரின் கட்டணமாக 21/2% ; ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவ்வாறான அனைத்து கட்டணங்களும் பணத்தில் செலுத்த வேண்டும். கொள்வனவு விலையின்

மிகுதியை 75% வீதத்தை ஏலவிற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கல்நெவ கிளை மக்கள் வங்கியில் வைப்பிலிடுதல் வேண்டும் :

குத்தகை உரிமைக்காகவும், மேலதிக விவரங்களுக்காகவும் மக்கள் வங்கி அனுராதபுரம் பிரதேச பிரதான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 025- 2222593, 025- 2223035, 025- 2222500, 025- 2235855

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
மக்கள் வங்கியும் ஏனைய வங்கிகளும்
ஏற்றுக்கொண்ட முன்னனியில் திகழும்
ஏலதார்களும் மதிப்பீட்டாளர்களும் .

தலைமை அலுவலகம் :

24, டொரிங்டன் வீதி,
கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/
தொலைநகல் : 081-2224371
ஈ-மெயில் :
sameera@sri.lanka.net

2-741

---

**செலான் வங்கி - வெளிமடைக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**ஆதனங்கள் ஏலவிற்பனை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமடை செயலாளர் பிரிவு உடபலாத்த கோரளை நுவதலாவ கிராமத்தில் அமைந்துள்ள ‘வேமுள்ள வத்த’ மற்றும் ‘உடுமுள்ள வத்த’ அல்லது ‘உடுமுள்ள ஹேன’ என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டப்ளியூ. பீ. எம். வெல்கொல்லவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இலக்கம் 1052ஏ மற்றும் 1956, மே 06 ஆந் திகதி கொண்ட துண்டு இல. 1 அடையாளமிடப்பட்ட பெறுமதிவாய்ந்த ஒரு ஏக்கர் மூன்று றூட் 20 பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 20பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி, மேற்படி வரைவு பதுளை காணிப்பதிவகத்தில் சீ 311/66 இன் கிழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேலே விபரிக்கப்பட்டுள்ள நுவதலவையில் அமைந்துள்ள ‘வேமுள்ள வத்த’ மற்றும் ‘உடுமுள்ள வத்த’ அல்லது ‘உடுமுள்ள ஹேன’ என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ் பீ. ரத்நாயக்கவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இலக்கம் 556 மற்றும் 1994, சனவரி 03 ஆந் திகதி கொண்ட துண்டு இல. 1 அடையாளமிடப்பட்ட ஒரு ஏக்கர் இரண்டு றூட் 31.2 பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 31.2பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் குறித்த காணியைச் சென்றடைவதற்காகவுள்ள துண்டு இல. 2 இல் ஒதுக்கப்பட்டுள்ள மேலதிகமாகவுள்ள காணியைப் பயன்படுத்துவதற்கான உரிமை அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி வரைவு இல. ஸீ 515/24 இன் கீழ் பதுளை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*(கடன்பட்டார் என்ற வகையில் வெலிமடையைச் சேர்ந்த கூதையா வேலாயுதம் மற்றும் சின்னப்பன் சுந்தராஜ் ஆகியோருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி. அவ்வாறிருக்க மேலே குறிப்பிடப்பட்ட கூதையா வேலாயுதம் என்பவர் 1996, மாச்சு 27 ஆந் திகதி காலமாகிவிட்டார். அவரின் சொத்துக்களுக்கு சட்ட ரீதியான அனந்திரக்கார்களாக இந்துமதி வேலாயுதம், வேலாயுதம் தியாகரூபன், வேலாயுதம் நன்தனி மற்றும் வேலாயுதம் கமலரூபன் மற்றும் ஆகியோர் உள்ளனர் என்பதை உயில் வழக்கு இல. வீ/ப்ரோ 10 இன்படி பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2007, மாச்சு 15 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய உள்ளது.*

**மேலதிக விபரங்களுக்கு.**- 2006, நவெம்பர் 24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி, 2006, செத்தெம்பர் 29 ஆந் திகதி “டெயிலி மிரர்” மற்றும் “லங்காதீப” மற்றும் 2006, ஒற்றோபர் 3 ஆம் திகதி வீரகேசரி நாளிதழ்களை பார்க்கவும்)

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- வெலிமடை நகரத்திலிருந்து நுவரெலியா வீதியுடாக சுமார் 2 கி. மீ. வரை சாப்புக்கடை சந்திவரை சென்று பின்னர் வலது பக்கம் திரும்பி வெலிமடகமை வரை சுமார் 300 மீ. வரை சென்ற பின் இடதுபக்கம் திரும்பி வாகனப் போக்கு வரத்து மண் பாதையில் சுமார் 300 மீற்றர் வரை சென்று மீண்டும் இடது பக்கமாகத் திரும்பி தோட்டத்திற்கான வீதியின் பக்கமாக சுமார் 400 மீற்றர் சென்று மீண்டும் இடது புறம் திரும்பி வாகனப் போக்குவரத்துப் பாதையில் மீண்டும் 100 மீற்றர் தூரம் சென்று குறிப்பிட்ட இந்தக் காணியைச் சென்றடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின்பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு. கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் “கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)” இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456258, 2456263, 2456284,

துசித கருணாரத்ன (ச. நீ),
அனுமதிபெற்ற அளவையாளர்
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940

2-736

## செலான் வங்கி லிமிட்டெட் - வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவு

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

*(கடன்பட்டார் என்ற வகையில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட நாத்தாண்டியவில் அமைந்துள்ள பராமிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் கம்பெனிக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கு செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில செயலாளர் பிரிவு பிற்றிகல் கோரளே, மெதபலாத்த, கொட்டராமுள்ள, பஹல கொட்டராமுள்ளயில் அமைந்துள்ள 'தும்மோதர வத்த' என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேராவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இலக்கம் 3418 மற்றும் 1975, செத்தெம்பர் 4 ஆந் திகதி கொண்ட துண்டு வை 4 என அடையாளமிடப்பட்ட பெறுமதிவாய்ந்த காணி.

அண்மைய நில அளவை ஒன்றின்படி மேற்படி துண்டு வை 4 பின்வருமாறு அடையாளமிடப்பட்டுள்ளது :

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாராவில செயலாளர் பிரிவு, பிட்டிகல் கோரளே, மெதபலாத்த, பஹல கொட்டராமுள்ளவில் அமைந்துள்ள துன்மோதரவத்த என்றழைக்கப்படுகின்ற மேற்படி வரைவு இல. 3518 அனுமதிபெற்ற நில அளவையாளரும் சமன்படுத்துபவருமான எச். எஸ். எஸ். பெரேராவினால் மீள அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 3456 மற்றும் 1997 ஏப்பிறல் 22 ஆந் திகதி கொண்ட துண்டு வை4 அடையாளமிடப்பட்ட ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபத்தாறு பேர்ச்சஸ் (1ஏ. 13றூ. 26பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள், மரம், செடி, கொடிகள் அடங்கலாக அங்கே உள்ள அனைத்தும்.

### இரண்டாம் அட்டவணை

கீழே விவரிக்கப்படுகின்ற அசையும் மற்றும் அசையா சொத்துக்களான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மொத்தமாகவும் தனியாகவும் :

| *இல.* | *பொருள்* | *தொகை* | *விளக்கம்* |
|---|---|---|---|
| 1. | ஜவ் க்ரஷர் | 1 | மாதிரி ஜே ஸீ-2 |
| 2. | பெல்ட் கன்வெயர் | 1 | மாதிரி பீ ஸீ-350-05 |
| 3. | ரோலர் க்ரஷர் | 1 | மாதிரி ஆர் 2-250 |
| 4. | பெல்ட் கன்வெயர் | 1 | மாதிரி பீ எம்-2000 (ஆர்) |
| 5. | 2 தொன் போல் ஆலை | 2 தொகுதிகள் | மாதிரி : பீ எம்-2000 (ஆர்) |
| 6. | 500 கி. போல் ஆலை | 1 | மாதிரி பீ எம்-500 (எஸ்) |
| 7. | நிறுவை தராசு | 1 | 1000 கி. |
| 8. | வேகம் தாழ்ந்த கலப்படக் கருவி | 2 தொகுதிகள் | மாதிரி : எல் எஸ் ஏ 5.0<br>ஆர் பீ எம் 22-24 ஜ. பீ. எம். |
| 9. | எயார் டயப்ராக்ம் குழாய்ப்பொறி | 2 | மாதிரி : எஸ் பீ 1-1/2" ஏ |
| 10. | தாழ் வேகம் கலப்படக் கருவி | 2 தொகுதிகள் | மாதிரி எல் எஸ் ஏ 3.0<br>ஆர் பீ எம்-22.24 ஆர் பீ எம் |
| 11. | மெல்லிய மெம்பிரேன் பம்ப் | 1 | மாதிரி எச் எம் பீ-3000 (எஸ்) |
| 12. | பில்டர் பிரேஸ் உதிரிப்பாகங்களுடன் | 1 | மாதிரி எப் பீ எச்-700-60 (ஆர்) |
| 13. | ஹய்ட்ரோலிக் ப்ரெஷர் பம்ப் | 1 | மாதிரி எச் பீ-200 |
| 14. | வைப்ரேஷன் சீவ் | 2 தொகுதிகள் | மாதிரி வீ எஸ்-600 |
| 15. | மெக்நெடிவ் பெர்ரோ பில்டர்ஸ் | 4 தொகுதிகள் | மாதிரி டபிள்யூ எப்-1000 |
| 16. | அதிவேக கலப்படக் கருவி | 1 | மாதிரி எச் ஏ எஸ்-10<br>ஆர் பீ எம் 100 ஆர் பீ எம் |
| 17. | எயார் டயக்ராம் பம்ப் | 1 | மாதிரி எஸ்பீ 1/2" ஏ |
| 18. | பெப்லெஸ் பே-போல்மில் | 20000 கி.கி. | பொருள் : ப்லின்ட்<br>அளவு : 3-5 செ.மி.-3500 கி.<br>4-6 செ.மி.-11000 கி.<br>8-10 செ.மி.-5500 கி. |
| 19. | பெப்லெஸ் பே-போல்மில் | 2300 | பொருள் : |
| 20. | வெக்கும் எக்ஸ்டியுடர் | 1 | மாதிரி வீஈ-10 (எஸ்.எஸ்) |
| 21. | தன்னியக்க ஹோலர் ஜிக்கர் இயந்திரம் | 2 | மாதிரி எச்ஆர்எம்-(என்) |
| 22. | மண் வெட்டும் இயந்திரம் | 2 | மாதிரி எச்சீசீ-டீ |

| இல. | பொருள் | தொகை | விளக்கம் |
|---|---|---|---|
| 23. | லெதர் கடின உலர்த்தி | 1 | மாதிரி : பீஎம்டீ-7ஜீX2 ரூம்ஸ் |
| 24. | வைட் உலர்த்தி | 1 | மாதிரி : பீஎம்டீ-7ஜீX2 ரூம்ஸ் |
| 25. | சூடேற்றும் மின்மாற்றி | 1 | மாதிரி எச்ஜீ-200 |
| | | | 200000 |
| | | | எல்பீஜீ அல்லது எல்என்ஜீ |
| 26. | ஸ்லிப் கைப்பிடி இணைந்த ரோட்டர் | 1 | மாதிரி எஸ்ஆர்-ஈ |
| 27. | அதிவேக கலப்பட கருவி (தேகம்) | 1 | மாதிரி எச்ஏஎஸ்-10 |
| 28. | வைப்ரேஷன் சீவர் | 1 | மாதிரி வீஎஸ்-600 |
| 29. | மெக்நெடிக் பெர்ரோ பில்டர் | 1 | மாதிரி டபிள்யூஎப்-1000 |
| 30. | வேகம் தாழ்ந்த கலப்படக்கருவி | 1 | மாதிரி எல்எஸ்ஏ-5.0 |
| 31. | வெக்கும் அஜிடெடர் அல்லது தாங்கி | 1 | மாதிரி வெட்-500 |
| 32. | வெக்கும் பம்ப் அல்லது தாங்கி | 1 | மாதிரி டபிள்யூஎஸ்வீபீ-9030 |
| 33. | சொலிட் பிரேஷர் காஸ்டிங் மேசை | 2 | மாதிரி பீஸீடீ-6எஸ் |
| 34. | மேல் கலப்படக் கருவி மேக உலர்த்தி | 1 | மாதிரி எல்எஸ்ஏ-2.0 (டீ.எச்.) |
| 35. | மாற்றிப் பலகை உலர் அறைக்கானது | 20 | அளவு டபிள்யூ1, 1.0Xஎல்2, 400X16 |
| 36. | எயார் டயகிராம் பம்ப் | 1 | மாதிரி எச்பீ 1-1/2"A |
| 37. | ஒதுக்குப் பகுதிக்கான சக்கரம் | 6 | மாதிரி பீடபிள்யூ-250 |
| 38. | சூளை | 1 | |
| 39. | தூசு துடைக்கும் இயந்திரம் | 1 | மாதிரி டீஎம்-1V |
| 40. | தூசு துடைக்கும் இயந்திரம் | 1 | மாதிரி டீஎம்-2V |
| 41. | எயார் கொம்ப்ரெஸர் | 1 | மாதிரி என்எச்-20 |
| 42. | கழிவுப் பிரிவுக்கான சக்கரம் | 19 | மாதிரி பீடபிள்யூ-250 |
| 43. | ஆதார மின்மாற்றி (250 கேவிஏ) | 1 | |
| 44. | சூளை | 1 | |
| 45. | நிறம் தயாரிப்பு இயந்திரம் | 1 | மாதிரி பீஎம்-4-4 (1) |
| 46. | கையார்ந்த கலெணி | 1 | மாதிரி எம்எப் பீ-பீ |
| 47. | பொலி இயந்திரம் | 2 | மாதிரி ஜீவீஏ-2 |
| 48. | பொட்டர்ஸ் வீல் | 10 | மாதிரி பீடபிள்யூ-250 |
| 49. | பொட் மில் | 1 | மாதிரி பீடபிள்யூ-5 |
| 50. | ஸ்டென்டர்ட் சீவ் | 1 | 325 |
| 51. | வெக்கம் எக்ஸ்ட்ரூடர் | 1 | மாதிரி வீஈ-3 (எஸ்.எஸ்.ஓ) |
| 52. | பில்டர் ப்ரெஸ் | | |
| | டப்ளியூ/மெம்ப்ரேன் பம்ப் | 1 | மாதிரி எப்பீஎம்-300 |
| 53. | ஸ்லிப் ஸ்டிறெற் | 1 | மாதிரி எம்எஸ்-பீ |
| | (ப்லங்கர்ஸ்) | | ஆர்பீஎம் : மெக்ஸ் 3000 ஆர்பீஎம்/மின் |
| 54. | 100 கி. போல் மில் | 1 | மாதிரி : பீஎம்-100 (ஆர்) |
| 55. | சர்கியுலேஷன் அவன் | 1 | மாதிரி : பீஎம்-100 (ஆர்) |
| 56. | மின்சார உலை | 1 | மாதிரி : பீ5943 |
| 57. | தன்னியக்க துளை | 1 | மாதிரி : வய்எல்-1ஏ |

மூன்றாம் அட்டவணை

* கேஸ் குழாய் மற்றும் உதிரிப்பாகங்கள், க்தர் குழாய் வேலைகள்
* உள்ளூர் இயந்திரங்கள்
* ஆய்வுகூடங்களுக்கான உள்ளூர் கருவிகள்
* தொழிற்சாலைகளுக்கான உள்ளூர் கருவிகள்
* இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள்
* அலுவலக உபகரணங்கள்
* அலுவலகங்களுக்கான தளபாடம் மற்றும் துணைக்கருவிகள்
* தொழிற்சாலைகளுக்கான தளபாடம் மற்றும் துணைக்கருவிகள்

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்களையும் இயந்திரங்களையும் நான் 2007, மாச்சு 20 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2007.01.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.01.04 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2007.01.10 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

B5 -B 079455

**சொத்தை சென்றடைகின்ற வழி**.- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு-கொச்சிக்கடை ஊடாக தன்கொட்டுவ வரை சென்று தன்கொட்டுவ-நாத்தாண்டி வீதியூடாக சுமார் 15.15 கி. மீ. வரை சென்று கொட்டராமுல்லயில் அமைந்துள்ள மெதொடிஸ்ட் சர்ச்சுக்கு அடுத்தாண்மையாகவுள்ள சொத்தை சென்றடையலாம்.

**கட்டணம் செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456258, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல. : 2696155, 2572940.

2-737